[24th September 1955

SRI M. NARAYANA KURUP : May I know who makes the division of one-third and two-third and whether it is made indiscriminately or all the good ones are taken by experts on the one side and the bad ones on the other?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir, the whole lot is divided as between one-third and two-third.

SRI S. RAMALINGAM : சமீபத்தில் தூத்துக்குடியில் முத்துக் குளித்ததில் கிடைத்த முத்துக்களில் மொத்த மதிப்பு என்ன ? ஒரு தனி முத்து எவ்வளவு அதிகமான விலைக்குப் போயிற்று என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றி என்னிடத்தில் தனித் தகவல் எதுவும் இல்லை.

Child welfare centre for Mannarghat firka

9 a.m. * 2445 Q.—SRI K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Health be pleased to state the present stage of the proposal to open a child welfare centre in Mannarghat firka, Malabar?

THE HON. SRI A. B. SHETTY : The proposal will be considered in connexion with the Annual Estimate of expenditure for 1956–57.

Revision of Sales Tax Act

* 2446 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether, with reference to the reply given by the Minister for Revenue on 11th March 1955 to the discussion on the Demand under General Sales Tax and other Taxes and Duties Administration, any conference of officials and non-officials has been or proposed to be convened to discuss the question of revision of the Sales Tax Act, 1939, so as to collect sales tax at a single point?

THE HON. SRI M. A. MANICKAVELU : A conference of officials and non-officials is proposed to be held shortly for discussing the question of single point taxation and other matters connected with sales tax administration.

SRI K. T. RAJU : இப்பொழுது மகாநாடு கூட்டப்படப்போகிறது. வியாபாரிகள் சில புள்ளிவிவரங்கள் கேட்டிருந்தார்கள். இந்த ராஜ்யத்தில் எப்படி "தாங்கள்" துன்பப்படுத்தப்படுகிறார்கள், எதற்காக ஒரு முனை விற்பனை வரி வேண்டுமென்று தாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அந்தப் புள்ளிவிவரங்கள் தேவைப் படுகின்றன. அந்தப் புள்ளி விவரங்கள் அந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware, Sir, what the merchants have asked for. At the conference many questions will be discussed and any information that could be available and given will be given.

SRI N. K. PALANISAMY : இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் எவ்வளவு, எந்த அளவுக்கு வெளி தேசத்திற்கு அனுப்பப்

24th September 1955]

படுகிறது? என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களைத்தான் வியாபாரிகள் கேட்டிருந்தார்கள். அதை அனுசரித்துத்தான் தற்போது போடப்படுகிற வரி சரியானதா என்பதை நிர்ணயிக்க முடியும். அந்த மாதிரியான புள்ளி விவரங்கள் கொடுக்கப்படுமா? மேலும் இந்தமாதிரியான ஒரு மகாநாட்டில் சட்டசபையின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தக் கேள்வி கேட்டால் எப்படி பதில் அளிக்கப்படுகிறதோ அதேமாதிரியாக மகாநாட்டில் கேட்கப்படும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM: இந்த மகாநாட்டின் நோக்கம் என்ன என்று அறிய விரும்புகிறேன். பலதரப்பட்ட முனை விற்பனை வரி இருக்கவேண்டுமா, அல்லது ஒரு முனை விற்பனை வரி இருக்கவேண்டுமா, என்பதைப்பற்றி இந்த மகாநாடு விவாதிக்குமா? அல்லது ஒரு முனை விற்பனை வரி கொண்டுவரவேண்டுமென்பதை சர்க்கார் முடிவு செய்து விட்டு அதன் சாத்தியக் கூறுகளைப்பற்றி மாத்திரம் இந்த மகாநாடு விவாதிக்குமா? ஒரு முனை விற்பனை வரி கொண்டுவரலாமா என்பதைப்பற்றி முடிவு செய்யவே இந்த மகாநாடு கூட்டப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மகாநாடு டாக்ஸேஷன் விசாரணைக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப்பற்றி விவாதிக்கும். அந்தக் கமிஷனின் சிபார்சுகளில் ஒரு முனை விற்பனை வரி விதிப்பது பற்றியும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா விஷயங்களையும் கவனிப்பதற்காகத்தான் இந்த மகாநாடு கூட்டப்படுகிறது.

Minimum number of buses for a bus operator

* 2447 *Q.*—SRI M. NARAYANA KURUP: Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether a deputation on behalf of small bus operators met the Chief Minister and the Transport Minister on 29th March 1955 and presented a memorandum regarding the difficulties resulting from the new Government Order relating to the fixation of minimum number of buses for a fleet for a bus operator; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN: (*a*) Yes, Sir, if by new Government Order is meant G.O. No. 3353, Home, dated 15th November 1954.

(*b*) Government have cancelled the order issued in November 1954, according to which each viable unit of stage carriages in this State should consist of not less than ten buses and have restored the orders that were in force prior to November 1954, according to which transport authorities, while granting stage carriage permits, should work up to the minimum of five permits with a spare bus for each operator.

SRI M. PALANIYANDI: இந்தச் சட்டம் வந்தபிறகு சிறு பஸ் முதலாளிகளுக்கு பர்மிட் கொடுப்பது மறுக்கப்படுகிறது என்பதாக அரசாங்கத்தினிடம் சிறு பஸ் முதலாளிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிறு பஸ் முதலாளிகளுக்கும் பர்மிட் கொடுக்கலாம் என்பதாக அரசாங்கம் சிறு பஸ் முதலாளிகளுக்கு அனுகூலம் செய்யும் பொருட்டு உத்தரவு